மாண்புமிகு பேரவைத் தலைவர்: எவ்வளவு விரைவில் கொடுக்க முடியுமோ அவ்வளவு விரைவில் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன்: தொழிலாளர்கள் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது சரி, எவ்வளவு விரைவில் கொடுக்க முடியுமோ அவ்வளவு விரைவில் கொடுக்க ஏற்பாடு செய்கிறேன்.

(9). 1975-76-ஆம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) நிதிக்கோரிக்கை எண். 15—காவல் துறை.

(ஆ) நிதிக்கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள்—தொடர்ச்சி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலிலேயே ஒன்றைச் சொல்லி விடுகிறேன். இப்பொழுது இரண்டே முக்கால் மணி நேரத்திற்கும் குறைவாகத்தான் நமக்கு நேரமிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சரவர்களுக்கு ஒரு மணி நேரம் கொடுக்க வேண்டும். மீதியிருப்பது ஒன்றேமுக்கால் மணி நேரம்தான். 15 உறுப்பினர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள். ஒன்று, ஐந்து நிமிடங்களில் உறுப்பினர்கள் பேச்சை முடித்துக்கொள்ள வேண்டும். இல்லையென்றால் நேற்று பேசிய கட்சிகளைத் தவிர்த்து நேற்று பேசாத கட்சிகள் மட்டும் இன்றைக்குப் பேச வேண்டும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, நேரம் ஒதுக்குவதிலே எங்கள் கட்சிக்கு எவ்வளவு நேரம் ஒதுக்கப் பட்டிருக்கிறது என்று தாங்கள் தயவுசெய்து சொல்ல வேண்டும். நாங்கள் இரண்டாவது கட்சியாக இருக்கின்றோம், எங்கள் கட்சியின் சார்பாக திரு. கோபால் அவர்கள்தான் கொஞ்சநேரம் பேசியிருக்கிறார்கள். நானும் பேசவேண்டும். 5 நிமிடங்களில் பேசுவது என்றால் எங்களைப் போன்றவர்களால் 5 நிமிடங்களில் பேசுவது கஷ்டமாக இருக்கும். ஆகவே, 5 நிமிடங்களில் பேச விரும்பவில்லை என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கு வழி என்ன?